
CEYLONVACANCY.COM



1. பின்வரும் உருவை அவதானிக்க. அதனைப் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.



(1) ஆறு பிள்ளைகளும் சில விலங்குகளும் உள்ளன.

(2) குதிரைக்கு அண்மையில் இருக்கும் பிள்ளை தொப்பியை அணிந்துள்ளது.

(3) எல்லாப் பிள்ளைகளும் ஒரு குழுச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

2. பின்வரும் உருவில் A எனவும் B எனவும் குறிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு முறையே பொருத்தமான இரு உருப் பகுதிகளும் யாவை?




(1) 

(2) 

(3) 

3. கீழே உள்ள A, B, C, D, E ஆகிய உருக்களில் ஒத்த இரண்டு உருக்களும் யாவை?





(1) A உம் B உம் (2) A உம் D உம் (3) C உம் E உம்

4. பின்வரும் கவிதையில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

தங்கமான சிறகுகள் பிரகாசிக்கின்றதே
............... அங்கும் இங்கும் அசைகின்றதே
மலர்களை மூடி ............... குடிக்கின்றதே
............... என்று சொல்கின்றதே

| | | | |
|---|---|---|---|
| (1) | வானத்திலே | நீரை | தேனீ |
| (2) | காற்றினிலே | மகரந்தம் | பட்டம் |
| (3) | காற்றினிலே | தேனை | வண்ணத்துப்பூச்சி |

5. பின்வரும் வரிப்படத்தில் உள்ள வெறும் அடைப்புக்குப் பொருத்தமான உரு யாது?



CEYLONVACANCY.COM

(1)  (2)  (3) 

[பக். 3 ஐப் பார்க்க

CS CamScanner

6. கண்ணனின் தாயின் சகோதரனின் மகள் கீதா எனின், கண்ணன் கீதாவின்
   (1) தந்தையின் சகோதரியின் மகன் ஆவான்.
   (2) தந்தையின் சகோதரனின் மகன் ஆவான்.
   (3) தாயின் சகோதரனின் மகன் ஆவான்.

7. ஒரு பாத்திரத்தில் 10 சிவப்புப் பந்துகளும் 8 மஞ்சள் பந்துகளும் 6 வெள்ளைப் பந்துகளும் உள்ளன. ஒரு தடவைக்கு 2 சிவப்புப் பந்துகள் வீதமும் 1 மஞ்சள் பந்து வீதமும் 1 வெள்ளைப் பந்து வீதமும் வெளியே பந்துகள் எடுக்கப்படுகின்றன. அவ்வாறு பந்துகள் வெளியே எடுக்கப்படத்தக்க தடவைகளின் எண்ணிக்கை முடிவடைந்த பின்பு பாத்திரத்தில் எஞ்சியிருக்கும் பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது?
   (1) 2    (2) 4    (3) 6


8. எல்லா விதங்களிலும் ஒன்றையொன்று ஒத்த 6 கணினிகளை இரு பாடசாலைகளுக்கிடையே விநியோகிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு பாடசாலைக்கும் கிடைக்கத்தக்க கணினிகளின் எண்ணிக்கை வேறுபடலாம். ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு கணினியேனும் கிடைக்குமாறு அந்த ஆறு கணினிகளும் விநியோகிக்கப்படத்தக்க வேறுபட்ட எத்தனை விதங்கள் உள்ளன?
   (1) 5    (2) 6    (3) 7

CEYLONVACANCY.COM

9. முரளி ஒரு குறித்த ஆண்டிலே ஜனவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் பிறந்தான். சங்கரி அதே ஆண்டில் பெப்புரவரி மாதத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமையில் பிறந்தாள். இவ்விரு நாட்களையும் குறிக்கும் எண்களின் மொத்தம் 38 ஆகும். முரளியின் பிறந்த திகதி ஜனவரி மாதத்தின்
   (1) 29 ஆந் திகதியாகும்.    (2) 30 ஆந் திகதியாகும்.    (3) 31 ஆந் திகதியாகும்.

10. சுந்தரி சுந்தரனிலும் பார்க்க இரண்டரை வயதினால் இளையவள் ஆவாள். சுந்தரன் 2005 ஆம் ஆண்டில் பிறந்தான். சுந்தரி பிறந்த ஆண்டு
   (1) சந்தேகமின்றி 2007 ஆக இருத்தல் வேண்டும்.
   (2) சந்தேகமின்றி 2008 ஆக இருத்தல் வேண்டும்.
   (3) 2007, 2008 ஆகிய இரு ஆண்டுகளில் ஒன்றாகும்.


11. உருவில் உள்ள நெய்யரியில் இருக்கும் நான்கு வெற்றிடங்களில் 3, 4, 5, 6 ஆகிய நான்கு இலக்கங்களை, பொது எல்லைக் கோட்டினால் வேறுபடுத்தப்படும் ஒவ்வொரு இரு சதுரங்களிலும் இருக்கும் இரு இலக்கங்களினதும் வித்தியாசம் 1 ஆக **இராதவாறு** நிரப்புதல் வேண்டும். இவ்வாறு நெய்யரி நிரப்பப்படத்தக்க எத்தனை விதங்கள் உள்ளன?





   (1) 1    (2) 2    (3) 3

12. "நிமலனின் ஒரே சகோதரன் விமலன் ஆவான். நிமலி என்பவள் நிமலனின் ஒரு சகோதரி ஆவாள். நிமலியின் ஒரே சகோதரி விமலி ஆவாள்." இதற்கு ஏற்ப விமலிக்கு உள்ள சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும் முறையே,
   (1) 2, 2 ஆகும்.    (2) 1, 2 ஆகும்.    (3) 2, 1 ஆகும்.

13. ஒரு சமதள நிலத்தில் வரையப்பட்டுள்ள ஒரு சதுரத்தின் உச்சிகளில் A, B, C, D ஆகிய நால்வரும், A இற்கு வடக்கே B உம் B இற்கு மேற்கே C உம் C இற்குத் தெற்கே D உம் இருக்குமாறு, அமர்ந்துள்ளனர். A ஆனவர் C இற்கும் D இற்கும் முறையே எத்திசைகளில் அமர்ந்துள்ளார்?
   (1) தென்கிழக்கு, கிழக்கு    (2) தென்கிழக்கு, மேற்கு    (3) வடமேற்கு, கிழக்கு

14.  எனின்  = ? ஆவதற்கு

? உள்ள இடத்திற்குப் பொருத்தமான உரு யாது?




(1)    (2)    (3)

[பக். 4 ஐப் பார்க்க

CamScanner

**15.** பின்வரும் உருக் கோலத்தில் ? உள்ள இடத்தில் வரவேண்டிய உரு யாது?






(1)





(2)




(3)

**16.** பின்வரும் உருக் கோலத்தில் ? உள்ள இடத்தில் வரவேண்டிய உரு யாது?






(1)




(2)



(3)

CEYLONVACANCY.COM

**17.**



உருவில் உள்ள வளையத்தில் 3 வெள்ளைப் பந்துகளும் 3 கறுப்புப் பந்துகளும் வைக்கப்பட்டுள்ளன. ↓ உள்ள பந்திலிருந்து 'ஒன்று' எனத் தொடங்கி வலஞ்சுழியாக ஒன்று இரண்டு மூன்று என்றவாறு எண்ணி 'மூன்று' எனக் கூறப்படும் பந்து அகற்றப்படுகின்றது. அடுத்த பந்திலிருந்து தொடங்கி ஒன்று இரண்டு மூன்று என்றவாறு எண்ணி 'மூன்று' எனக் கூறப்படும் பந்தும் அகற்றப்படுகின்றது. இவ்வாறு இரு பந்துகள் மாத்திரம் எஞ்சியிருக்கும் வரைக்கும் இச்செயன்முறை தொடர்ந்து செய்யப்படுகின்றது. அப்போது எஞ்சியிருப்பன


(1) 2 கறுப்புப் பந்துகள்

(2) 2 வெள்ளைப் பந்துகள்

(3) ஒரு வெள்ளைப் பந்தும் ஒரு கறுப்புப் பந்தும்

**18.** A, B, C, D என்ற நால்வர் உருவில் உள்ளவாறு ஒரு நிரையில்,

A இன் இடக்கைப் பக்கத்தில் B இன் வலக்கைப் பக்கத்திலும்
B இன் இடக்கைப் பக்கத்தில் C இன் இடக்கைப் பக்கத்திலும்
C இன் வலக்கைப் பக்கத்தில் D இன் வலக்கைப் பக்கத்திலும்




நிற்குமாறு உள்ளனர். ஒரே திசையை நோக்கி நிற்கும் மூவரும் யாவர்?

(1) A, B, C  (2) A, B, D  (3) A, C, D

CEYLONVACANCY.COM

**19.** சூரியன் நன்றாக உதித்துள்ள ஒரு காலையில் ஒரு மாணவன் ஒரு சமதள நிலத்தில் வரையப்பட்டுள்ள ஒரு வட்ட ஓட்டப் பாதையில் முற்றாக இரு சுற்றுகள் நடக்கிறான். அப்போது அவனுடைய நிழல் அவனுடைய இடக்கைப் பக்கத்திலிருந்து வலக்கைப் பக்கத்திற்கு எத்தனை தடவை மாறும்?

(1) 2  (2) 3  (3) 4

**20.** பின்வரும் தகவல்களைக் கருதுக.

- வெள்ளை நிறக் குமிழ் ஒளிருமெனின், மஞ்சள் நிறக் குமிழும் ஒளிரும்.
- சிவப்பு நிறக் குமிழ் ஒளிருமெனின், வெள்ளை நிறக் குமிழ் ஒளிராது.
- சிவப்பு நிறக் குமிழ் ஒளிராவிட்டால், நீல நிறக் குமிழ் ஒளிரும்.

இதற்கமைய ஒரே தடவையில் ஒளிரக்கூடிய மூன்று குமிழ்களாவன,

(1) வெள்ளை, மஞ்சள், சிவப்பு
(2) வெள்ளை, மஞ்சள், நீலம்
(3) வெள்ளை, சிவப்பு, நீலம்

[பக். 5 ஐப் பார்க்க

**21.** பின்வரும் உருவில் உள்ள கழுத்து மாலை ஓர் இடத்தில் கழற்றப்பட்டு ஒரு மேசை மீது நீளப்பாட்டில் வைக்கப்பட்டது. அதனைச் சரியாகக் காட்டும் உரு யாது?




(1) 

(2) 

(3) 

CEYLONVACANCY.COM

**22.** பின்வரும் மோட்டர்க் காரின் ஒரு சில்லின் சுற்றளவு 2 மீற்றராகும். அம்மோட்டர்க் கார் இப்போது உள்ள இடத்திலிருந்து 10 மீற்றர் முன்னோக்கிச் சென்று அதன் பின்னர் 2 மீற்றர் பின்னோக்கிச் சென்று நிற்பாட்டப்பட்டது. இப்பயணத்தில் மோட்டர்க் காரின் பிற்சில்லில் ↑ இடப்பட்டுள்ள தானம் நிலத்தைத் தொடும் தடவைகளின் எண்ணிக்கை யாது?




(1) 6

(2) 7


(3) 8

**23.** கீழே ஓர் அட்டைத்தாளில் செய்யப்பட்ட, இரு துளைகள் வீதம் உள்ள நான்கு உருவங்களும் அவற்றை இடுவதற்காகத் தயாரித்த கோல்கள் உள்ள ஒரு தாங்கியும் தரப்பட்டுள்ளன.

A B C D




அவ்வுருவங்கள் A தொடக்கம் D வரை ஒன்றன் மீது ஒன்று இருக்குமாறு முறையே தாங்கியில் வைக்கப்பட்டன. அது மேலே இருந்து பார்க்கப்படும்போது தோற்றும் விதம் யாது?



(1)



(2)



(3)

**24.** ஒரு வட்ட ஓட்டப் பாதையின் உள் எல்லையின் நீளம் 200 மீற்றர் ஆகும். ஒவ்வொரு 10 மீற்றர் தூரத்திலும் ஒரு கொடி வீதம் முதலாவதாக ஒரு மஞ்சள் நிறக் கொடியும் இரண்டாவதாக ஓர் ஊதா நிறக் கொடியும் மூன்றாவதாக ஒரு வெள்ளை நிறக் கொடியும் என்றவாறு இம்மூன்று நிறங்களிலும் கொடிகள் நாட்டப்பட்டன. இவ்வொழுங்குமுறையில் குறித்து முடிக்கும்போது சம எண்ணிக்கைகளில் உள்ள கொடிகளின் நிறங்கள் யாவை?

CEYLONVACANCY.COM

(1) மஞ்சள் நிறமும் ஊதா நிறமும்

(2) ஊதா நிறமும் வெள்ளை நிறமும்

(3) வெள்ளை நிறமும் மஞ்சள் நிறமும்

**25.** நான்கு பிள்ளைகள் உள்ள ஒரு குறித்த குடும்பத்தில் மூத்த பிள்ளை ஆண் பிள்ளையாகும். அவனுக்கு இரு தம்பிகளும் ஒரு தங்கையும் உள்ளனர். இக்குடும்பத்தில் இளைய பிள்ளைக்கு இரு அண்ணன்மார்களும் ஓர் அக்காவும் உள்ளனர். மூத்த பிள்ளையும் இளைய பிள்ளையும் தவிர ஏனைய இரு பிள்ளைகளையும் பற்றிய சரியான கூற்று யாது?

(1) இருவரும் ஆண் பிள்ளைகள் ஆவர்.


(2) இருவரும் பெண் பிள்ளைகள் ஆவர்.

(3) ஒருவர் மாத்திரம் ஆண் பிள்ளை ஆவார்.

[பக். 6 ஐப் பார்க்க

CamScanner

**26.** பின்வரும் A, B, C ஆகிய உருக்களைப் பார்க்க. பரப்பளவுக்கேற்ப அவற்றில் இரு உருக்கள் ஒத்தவை. ஓர் உரு வேறுபட்டது. வேறுபட்ட உரு யாது?




(1) A (2) B (3) C

**27.** ஒரு கடிகாரம் 1.00, 2.00, 3.00, ... என்றவாறு நேரத்தைக் காட்டும்போது முறையே ஒரு தடவை, இரு தடவைகள், மூன்று தடவைகள், ... என்றவாறு ஒலிக்கின்றது. அது இடையிடையே 30 ஆம் நிமிடத்தில் ஒரு தடவை வீதமும் ஒலிக்கின்றது. சனிக்கிழமை காலையில் மோகன் படித்துக்கொண்டு இருந்தபோது கடிகாரம் 24 தடவை ஒலித்தமை அவனுக்குக் கேட்டது. அவன் மு.ப. 11.45 இற்குப் படித்து முடித்தான் எனின், படிக்கத் தொடங்கிய நேரம் யாதாக இருக்கலாம்?

(1) மு.ப. 9.15 (2) மு.ப. 9.45 (3) மு.ப. 10.15


**28.** பின்வரும் நிகழ்வுகளைக் கருதுக.

a - நேற்று நான் நித்திரைக்குச் செல்லும்போது நள்ளிரவு கடந்திருந்தது.
b - ஓய்வு நேரத்திற்குப் பின்னர் ஒரு கணிதப் பரீட்சையும் இருந்தது.
c - நான் எனது விளையாட்டு உடையைக் கொண்டு வரவில்லை என்பதை அச்சந்தர்ப்பத்தில் உணர்ந்தேன்.
d - தாமதமாக நித்திரையிலிருந்து எழுந்த நான் பாடசாலைக்குக் குழம்பிய நிலையில் சென்றேன்.
e - பாடசாலை முடிவடைந்ததும் எனது நண்பனுடன் விளையாட்டுப் பயிற்சிக்காகச் சென்றேன்.

இந்நிகழ்வுகளின் சரியான ஒழுங்குமுறை யாது?

(1) a, d, b, e, c (2) a, d, c, b, e (3) d, b, a, c, e

**29.** பின்வரும் நான்கு உருச் சட்டங்களில் ஒரு நிகழ்வின் நான்கு சந்தர்ப்பங்கள் காட்டப்பட்டுள்ளன.



A B C D

அச்சந்தர்ப்பங்களின் அர்த்தமுள்ள ஒழுங்குமுறை யாது?

(1) B D A C (2) B D C A (3) C A D B

**30.** அடித்தளம் சதுரமான ஒரு பெட்டியின் உள் ஓரங்கள் வழியே 16 பால் மாத் தகரப் பேணிகள் மூடி மேல்நோக்கி இருக்குமாறு ஒன்றையொன்று அடுத்து வைக்கப்பட்டுள்ளன. அப்பெட்டியின் நடுப் பகுதியில் அதிகபட்சம் இன்னும் எத்தனை அத்தகைய பால் மாத் தகரப் பேணிகளை அவ்விதமாக அடுக்கி வைக்கலாம்?

(1) 8 (2) 9 (3) 12

**31.** மு.ப. 9.30 ஆகும்போது ஓர் அலுவலகத்தில் ஐந்து வெளியாட்கள் இருந்தனர். அவ்வேளையிலிருந்து ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒரு தடவை இருவர் வீதம் அந்த அலுவலகத்திற்கு வருகின்றனர். ஒவ்வோர் ஐந்து நிமிடத்திற்கும் ஒரு தடவை ஐவர் வெளியேறுகின்றனர். மு.ப. 9.42 இற்குப் பின்னர் அலுவலகத்தில் இருக்கும் வெளியாட்களின் எண்ணிக்கை யாது?

(1) 14 (2) 17 (3) 19

CEYLONVACANCY.COM

CEYLONVACANCY.COM

[பக். 7 ஐப் பார்க்க

CamScanner

**32.** மின்னொளிச் சைகை உள்ள ஒரு பாதசாரிக் கடக்குமிடத்தில் சிவப்பு நிறமும் பச்சை நிறமும் மாறிமாறி ஒளிர்கின்றன. சிவப்பு நிறம் 90 செக்கனுக்கும் பச்சை நிறம் 15 செக்கனுக்கும் ஒளிர்கின்றன. முதலில் சிவப்பு நிறம் ஒளிருமெனின், அவ்வேளையிலிருந்து 5 நிமிடத்தினுள் பச்சை நிறம் மொத்தமாக எத்தனை செக்கனுக்கு ஒளிரும்?

(1) 30 (2) 45 (3) 60

**33.** பின்வரும் பந்தியை வாசிக்க.

"சிங்கராஜாக் காடு இலங்கையின் தென்மேற்கில் தாழ் நாட்டு ஈரவலயத்தில் சபரகமுவ எல்லைக்கும் தென் மாகாண எல்லைக்கும் உள்ளே அமைந்துள்ளது. அதன் பரப்பளவு ஏறத்தாழ 88.64 சதுரக் கிலோமீற்றரெனக் கணக்கிடப்பட்டுள்ளது. அது பல அரிதான மரங்களினதும் விலங்குகளினதும் பிறப்பிடமாக உள்ளது. யுனெஸ்கோவினால் இது உலக மரபுச்செல்வமாகப் பெயரிடப்பட்டுள்ளது."

இப்பந்திக்கு ஏற்ப மிகவும் சரியான கூற்று எது?

(1) யுனெஸ்கோவினால் சிங்கராஜாக் காட்டின் பரப்பளவு 88.64 சதுரக் கிலோமீற்றராக வெளியிடப்பட்டுள்ளது.
(2) இங்கு வசித்த ஒரு சிங்கராஜாவினால் சிங்கராஜாக் காட்டிற்கு அப்பெயர் கிடைத்ததென நம்பப்படுகின்றது.
(3) சிங்கராஜாக் காட்டின் ஒரு பகுதி சபரகமுவ மாகாணத்திற்கும் ஒரு பகுதி தென் மாகாணத்திற்கும் உரியனவாகும்.


**34.** "நாய் ஓர் ஊனுண்ணி. நிமலனின் செல்லப் பிராணியும் ஓர் ஊனுண்ணியாகும்." அதற்கேற்ப நிமலனின் செல்லப் பிராணி பற்றி வரத்தக்க சிறந்த முடிபு யாது?

(1) சந்தேகமின்றி ஒரு நாயாகும்.
(2) ஒரு நாயாக இருக்கவோ, இல்லாதிருக்கவோ கூடும்.
(3) ஒரு நாயன்று, எனினும் ஓர் ஊனுண்ணியாகும்.


CEYLONVACANCY.COM

**35.**

A B C



சதுர வடிவமுள்ள ஒரு கடதாசி முறிந்த கோடு வழியே மடிக்கப்பட்டுள்ள விதம் A, B, C ஆகிய உருக்களில் காட்டப்பட்டுள்ளது. உரு C இற் காட்டப்பட்டுள்ளவாறு மூன்று இடங்களிலிருந்து சிறிய பகுதிகளை வெட்டி அகற்றிக் கடதாசியை முற்றாக விரிக்கும்போது கிடைப்பது யாது?



(1) (2) (3)

**36.** ரேவதியின் சட்டையின் நிறம் பற்றிச் சரியாகத் தீர்மானிப்பதற்குத் தேவைப்படும் இரு கூற்றுகளும் யாவை?

A - மஞ்சுளாவின் சட்டை சிவப்பு நிறமுள்ளது.
B - கமலாவின் சட்டை ரேவதியின் சட்டையிலும் பார்க்க மென்னிறமுள்ளது.
C - கமலாவின் சட்டை மஞ்சுளாவின் சட்டையிலும் பார்க்க மென்னிறமுள்ளது.
மஞ்சுளாவின் சட்டையின் நிறம் ரேவதியின் சட்டையின் நிறத்தை ஒத்தது.


(1) A, D (2) B, C (3) B, D

CEYLONVACANCY.COM

[பக். 8 ஐப் பார்க்க

**37.** பின்வரும் நெய்யரியையும் அதில் செல்வதற்காகத் தரப்பட்டுள்ள குறிகளையும் பார்க்க.

நெய்யரி




குறிகள்



திசையில் திரும்புக.


ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் தூரத்திற்கு முன்னோக்கிச் செல்க.

இடப் பக்கமாகத் திரும்பி ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் தூரத்திற்கு முன்னோக்கிச் செல்க.

வலப் பக்கமாகத் திரும்பி ஓர் அடைப்பின் ஓர் பக்கத்தின் தூரத்திற்கு முன்னோக்கிச் செல்க.

நிறுத்துக.


மேற்குறித்த குறிகளுக்கு ஏற்பப் பின்வருமாறு இடம் A இலிருந்து ஆரம்பித்து



என்னும் குறிகளுக்கு ஏற்ப செல்லும் ஒருவர் சென்று முடிக்கும் இடம் யாது?


(1) B (2) C (3) D

**38.** வெற்றிடத்திற்கு வரவேண்டிய உரு யாது?




(1) 


(2) 

(3) 


**39.** பின்வரும் உருவில் சிறிய சதுரமுகிகளைச் சேர்த்து அமைக்கத்தக்க ஒரு பெரிய சதுரமுகியின் ஒரு பகுதி காட்டப்பட்டுள்ளது. அதனைப் பூர்த்தி செய்வதற்கு A, B, C, D எனத் தரப்பட்டுள்ள பகுதிகளில் இரு பகுதிகள் தேவை. அவை யாவை?




CEYLONVACANCY.COM




A



B



C



D

(1) A, B (2) A, C (3) B, D

**40.** A, B, C எனப் பெயரிடப்பட்ட மூன்று கடிகாரங்கள் ஒரே நாளின் இரு சந்தர்ப்பங்களில் காட்டிய நேரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| கடிகாரம் | A | B | C |
|---|---|---|---|
| முதலாம் சந்தர்ப்பத்தில் காட்டிய நேரம் | மு.ப. 6.00 | மு.ப. 6.05 | மு.ப. 6.10 |
| இரண்டாம் சந்தர்ப்பத்தில் காட்டிய நேரம் | மு.ப. 9.00 | மு.ப. 9.05 | மு.ப. 9.15 |

CEYLONVACANCY.com

இதற்கு ஏற்ப மிகச் சரியான முடிபு யாது?

(1) ஒரு கடிகாரம் மாத்திரம் சரியான நேரத்தைக் காட்டுகின்றது.
(2) ஒரு கடிகாரத்தின் தொழிற்பாட்டில் மாத்திரம் குறைபாடு உள்ளது.
(3) குறைந்தபட்சம் இரு கடிகாரங்களேனும் பிழையான நேரத்தைக் காட்டுகின்றன.

***

CS CamScanner

CEYLONVACANCY.com

**1.** பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

திங்கட்கிழமை நடத்தப்படும் பாடசாலையின் காலைக் கூட்டத்தில் மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் ஆரம்பமானது. தரம் ஐந்து மாணவியான கமலினி முதலில் முன்வந்ததுடன் 'நாளாந்த நடத்தைகள்' என்ற தலைப்பில் தனது கருத்துக்களை முன்வைத்தாள். நேர அட்டவணைப்படி வேலை செய்வதன் முக்கியத்துவம் பற்றி வகுப்பின் பொறுப்பாசிரியர் கூறியதாகவும் தானும் நேர அட்டவணைப்படி வேலை செய்வதாகவும் கமலினி கூறினாள். அதற்கேற்ப தான் காலையில் எழுந்து வீட்டு வேலைகளில் உதவுவதுடன் மாலை நேரங்களில் வீட்டுத் தோட்ட வேலைகளில் உதவி செய்வதை மறந்துவிடாமல் செய்வதாகவும் கூறினாள். பேச்சினை நிறைவு செய்த பின்னர் அவள் தனது வீட்டுத் தோட்டத்தைப் பார்வையிட வருமாறு அழைப்பு விடுத்தாள். வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியர் கமலினியின் பேச்சுக்கு மதிப்பளித்து கமலினி நாள்தோறும் பாடசாலைக்கு வருகின்றவர் எனவும் பாடசாலை நடவடிக்கைகளில் பின்நிற்காத மாணவி எனவும் கூறினார்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) பாடசாலையில் காலைக்கூட்டம் நடைபெறும் தினம் எது?

..........................................................................................................

(ii) கமலினி தனது பேச்சுக்குத் தலைப்பாகக் கொண்டது எது?

..........................................................................................................

(iii) கமலினியின் பேச்சில் அடங்கிய, நாள்தோறும் மாலை நேரங்களில் அவளால் செய்யப்படும் வேலை யாது?

..........................................................................................................

(iv) பேச்சின் இறுதியில் கமலினியால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள் யாது?

..........................................................................................................

(v) கமலினி முன்வைத்த தலைப்புக்கு ஆசிரியர் கூறிய எந்த விடயம் உதவியது?

..........................................................................................................

(vi) வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியர் கமலினியின் பேச்சுக்கு மதிப்பளித்துக் கூறியது யாது?

..........................................................................................................

**2.** பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு **சரியாயின்** '✓' எனவும் **பிழையாயின்** '×' எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) வயலில் இறங்கிய உழவர்கள் சுறுசுறுப்புடன் வேலை செய்கின்றனர். (.........)

(ii) திவ்யா மேடை நாடகம் பார்க்கிறாள். (.........)

(iii) கிளி சத்தமிட்டபடி காட்டுக்குப் பறக்கின்றன. (.........)

(iv) பலத்த மழையினால் பாலம் இடிந்து வீழ்ந்தது. (.........)

(v) கீதா இனிமையான குரலில் பாடலைப் பாடினர். (.........)

**3.** நிகழ்கால ஒருமை வினைச் சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

(1) பார்க்கின்றது (2) பார்த்தது (3) பார்க்கின்றன

**4.** பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் சரியான சொற்களைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(i) (1) கண்காட்சி (2) கன்காட்சி (3) கண்காட்ச்சி

(ii) (1) குலந்தை (2) குளந்தை (3) குழந்தை

(iii) (1) எழுத்தாலர் (2) எழுத்தாளர் (3) எழுத்தாழர்

[பக். 3 ஐப் பார்க்க

CamScanner

5. பின்வரும் வாக்கியத்தை இறந்தகாலப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

நான் பாடசாலை வேலைகளில் ஈடுபடுகின்றேன்.

........................................................................................................................

6. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஒத்தகருத்துச் சொல் ஒவ்வொன்றை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) கானகம் : ..................................... (ii) புத்தகம் : .....................................

7. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் **எழுத்துப் பிழையுள்ள** சொற்கள் **இரண்டு** உள்ளன. அந்தச் சொற்கள் இரண்டினையும் தெரிவுசெய்து **பிழை திருத்தி** அச்சொற்கள் **இரண்டினை மாத்திரம்** புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

அன்பான நன்பன் யாரென ஆபத்தின்போது அரியலாம்.

(i) ..................................... (ii) .....................................

8. ஒவ்வொரு வாக்கியத்தினதும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழியை பின்வரும் அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து / பேராசை பெரு நட்டம் / ஆற்றில் போட்டாலும் அளவறிந்து போடு / ஆழமறியாது காலை விடாதே / ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு)

(i) அதிகளவு ஆசை பெருமளவில் தீமை ஏற்படுத்தும்.

........................................................................................................................

(ii) நன்கு சிந்திக்காமல் எதனையும் செய்ய முற்படக்கூடாது.

........................................................................................................................

9. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

| |
|---|
| தூய்மையான சூழல் என்ற தலைப்பினை விளக்கும் சுவரொட்டிப் போட்டி இடம்பெறுகிறது |

10. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை தரப்பட்டுள்ள கட்டத்தினுள் **ஆங்கில** எழுத்துக்களில் எழுதுக.

(i)



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

(ii)



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

11. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) has / ten / sister / rupees / My : ........................................................................ .

(ii) buy / bat / a / want / We / to : ........................................................................ .

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்சொல்லை** எழுதுக.

(i) Parents : ..................................... (ii) Fire : .....................................

13. 'ககுல (කකුල)' என்ற சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.


........................................................................................................................

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

வெளியே போகலாமா? : ........................................................................

[பக். 4 ஐப் பார்க்க

CS CamScanner

**15.** 


எண்சட்டத்தில் குறிப்பிடப்படும் எண்ணினை இலக்கங்களில் எழுதுக.

.................................................................................

**16.**

| | |
|---|---|
| 5 | 4 |
| 7 | 9 |

அடைப்பில் உள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி 4 இன் இலக்கப் பெறுமானம் 400 ஆகவும் 7 இன் இலக்கப் பெறுமானம் 70 ஆகவும் கொண்டு உருவாக்கக்கூடிய நான்கு இலக்க எண்கள் **இரண்டினை** எழுதுக.

.............................................. , ..............................................

**17.** பின்வரும் எண் கோலத்தை இனங்கண்டு இரண்டு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான **இரண்டு** எண்களையும் எழுதுக.

.................... , .................... , 15, 19, 23, 27

**18.** எண் 20 650 ஐ **எழுத்தில்** எழுதுக.

.................................................................................

**19.** பேருந்து ஒன்று முதலாவது பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து 55 பயணிகளுடன் பயணத்தை ஆரம்பிக்கின்றது. இரண்டாவது தரிப்பிடத்தில் 8 பயணிகள் பேருந்திலிருந்து இறங்கியதுடன் 12 பயணிகள் பேருந்தினுள் ஏறினர். இரண்டாவது தரிப்பிடத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும்போது பேருந்தில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை யாது?

: ....................................

**20.** மாம்பழங்கள் 16 இன் நான்கில் இரண்டு பங்கு $\left(\frac{2}{4}\right)$ மாம்பழங்கள் எத்தனை?

: ....................................

**21.** ஒன்றுக்கொன்று சமனான முகங்கள் 6 உம் விளிம்புகள் 12 உம் உள்ள கேத்திரகணிதத் திண்மப் பொருள் எது?

: ....................................

**22.** 45 மீற்றர் நீளமுள்ள மதில் ஒன்றைக் கட்டுவதற்கு இரண்டு நாட்கள் எடுத்தன. முதலாவது நாளில் 27 மீற்றர் 75 சென்றிமீற்றர் நீளம் கட்டி முடிக்கப்பட்டது. இரண்டாம் நாளில் கட்டப்பட்ட நீளம் யாது?

: ............ மீற்றர் ............ சென்றிமீற்றர்

**23.** இப்போது நேரம் முற்பகல் 11.00 எனின், இன்னும் 2 மணித்தியாலம் 30 நிமிடங்களின் பின்னர் நேரம் என்ன?

: ....................................


**24.** 235 மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்வதற்காக 5 பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஒவ்வொரு பேருந்திலும் சமமான எண்ணிக்கைகளில் மாணவர்கள் பயணம் செய்தனரெனின், ஒரு பேருந்தில் பயணம் செய்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

: ....................................

**25.** ஒரு நாளில் கடை ஒன்றில் இருந்த 25 kg பருப்பில் விற்கப்பட்ட பருப்பின் அளவு 12 kg 750 g ஆகும். அன்றைய நாள் மீதியாக இருந்த பருப்பின் அளவு யாது?

: ............ kg ............ g

**26.** நிமலன் ஒரு பென்சிலின் நீளத்தை அளப்பதற்காகப் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு சென்றிமீற்றர் கோல் ஒன்றைப் பயன்படுத்தினான். பென்சிலின் நீளம் யாது?




: .................... சென்றிமீற்றர்

**27.** பின்வரும் சிட்டையின் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

| பொருள் | ஒன்றின் விலை (ரூபாய்) | எண்ணிக்கை | விலை (ரூபாய்) |
|---|---|---|---|
| அப்பியாசக் கொப்பிகள் | 85 | 3 | .......... |
| பஸ்ரல் வர்ணப் பெட்டி | 270 | .......... | 540 |
| | | **மொத்தம்** | 795 |


[பக். 5 ஐப் பார்க்க

CamScanner

**28.** 2 லீற்றர் நீரைக் கொள்ளத்தக்க ஒரு பாத்திரத்தினை முழுமையாக நிரப்புவதற்கு 500 மில்லி லீற்றர் பாத்திரத்தினால் நீரை எத்தனை தடவைகள் ஊற்ற வேண்டும்?

..........................................

**29.** மாணவர் குழு ஒன்று மிகவும் விரும்பும் நிறங்கள் பற்றிய தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




(i) மஞ்சள் நிறத்திலும் பார்க்க ஊதா நிறத்தை விரும்பும் மாணவர் எண்ணிக்கை யாது?

..........................................

(ii) குழுவில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................

- **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** இலைக்கஞ்சியைத் தயாரிக்கும்போது பொருத்தமான இலைவகை, தேங்காய்ப்பூ என்பவற்றுக்கு மேலதிகமாகத் தேவைப்படுவது

(1) இறைச்சி வகை (2) பழ வகை (3) அரிசி வகை

**31.** மண்ணைச் செழிப்புடையதாக்குவதற்குப் பின்பற்ற வேண்டிய செயல் யாது?

(1) உணவு வகைகள் அவிக்கப்பட்ட கொதிநீரை மண்ணுக்குள் ஊற்றுதல்

(2) அழுகத்தக்க குப்பைகளை மண்ணுடன் சேர்த்து விடுதல்

(3) கிருமிநாசினி அடங்கிய போத்தல்களைக் கழுவிய நீரை மண்ணுக்குள் ஊற்றுதல்

**32.** விற்றமின் C பெருமளவில் அடங்கிய உணவு

(1) கொய்யாப்பழம் (2) நிலக்கடலை (3) சோயா அவரை

**33.** மலைச்சரிவில் உள்ள ஒரு மரம் காற்றினால் வேரோடு விழுத்தப்பட்டிருந்தது. இதற்குப் பெரிதும் காரணமாக இருக்கக்கூடிய விடயம் யாது?

(1) மரம் மலர்களால் பாரமாகி இருந்தமை

(2) அந்த இடத்தில் மண் அரித்துச் செல்லப்பட்டு இருந்தமை

(3) மரத்தில் பறவைகளின் கூடுகள் இருந்தமை

**34.** 'துவாய்' தனித்தனியாகப் பயன்படுத்தப்பட வேண்டியதாக இருப்பது

(1) வீட்டிலுள்ள ஏனையோரும் அவ்வாறு செய்வதனால்

(2) அலங்காரமாக வைத்திருக்க வேண்டியதனால்

(3) நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக

**35.** 'காபோவைதரேற்றுப்' போசணை உடலுக்குத் தேவையான அளவு **கிடைக்காதபோது** ஏற்படும் நிலைமை

(1) பசியை உணர முடியாதிருத்தல்

(2) உடலின் நிறை குறைதல்

(3) வாய் சார்ந்த நோய்கள் ஏற்படுதல்

**36.** அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய் எது?

(1) யானைக்கால் நோய் (2) நீரிழிவு (3) நெருப்புக்காய்ச்சல்

[பக். 6 ஐப் பார்க்க

**37.** 'மொனரவில கெப்பெட்டிப்பொல திசாவ' என்பவரின் வரலாறு இலங்கையர்களுக்கு முக்கியத்துவம் பெறுவது

(1) வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டமையால்

(2) மிகச் சிறந்த தரமான சமய நூல்களை எழுதியமையால்

(3) இலவசக் கல்விக்காக நடவடிக்கைகளை மேற்கொண்டமையால்

**38.** வீட்டுத் தோட்டத்திற்கு வரும் பறவையான செண்பகத்துக்கு

(1) கறுப்பு நிறச் சிறகுகளும் வெள்ளை நிறக் கண்களும் உள்ளன.

(2) கறுப்பு நிற, நீல நிறச் சிறகுகளும் சிவப்பு நிறக் கண்களும் உள்ளன.

(3) கறுப்பு நிற, கபில நிறச் சிறகுகளும் சிவப்பு நிறக் கண்களும் உள்ளன.

**39.** ஒப்பமான செயற்பாட்டுக்காக எண்ணெய் பயன்படுத்தப்படும் உபகரணம் எது?

(1) அலவாங்கு (2) தள்ளுவண்டி (3) சுத்தியல்

**40.** மருந்துகளைப் பயன்படுத்தும்போது **செய்யக்கூடாதது**

(1) விரைவாக நலம் பெறுவதற்காக அதிக அளவு மாத்திரைகளை உட்கொள்ளுதல்

(2) சாப்பாட்டுக்கு முன்னும் பின்னும் என்பதைக் கவனத்தில் கொள்ளுதல்

(3) நாளொன்றுக்கு குறிப்பிட்ட தடவைகளுக்கேற்ப மருந்தினை உட்கொள்ளுதல்


**41.** எவரேனும் ஒருவர் நீரில் மூழ்குவதைக் காணும் நபர் **உடனடியாகச்** செய்ய வேண்டிய பொருத்தமான செயல் யாது?

(1) உதவி கோரிச் சத்தமிடல்

(2) நீரின் மேலே வரும்வரை பார்த்திருத்தல்

(3) காப்பாற்றுவதற்காகத் தானும் நீரில் குதித்தல்

**42.** வடிவத்தில் வேறுபட்ட, கொள்ளளவுகள் சமமான, முழுமையாக நீரினால் நிரப்பப்பட்ட மூன்று பாத்திரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இது பற்றிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.



(1) நடுவில் உள்ள பாத்திரத்தில் அதிக அளவிலான நீர் உள்ளது.

(2) நீருக்கு நிச்சயமான வடிவம் ஒன்று இருக்கின்றது.

(3) மூன்று பாத்திரங்களிலும் சம அளவு நீர் உள்ளது.

**43.** செக்கு பயன்படுத்தப்படுவது

(1) வயல் வேலைக்கு

(2) எண்ணெயைப் பிழிந்து எடுப்பதற்கு

(3) துணியை நெசவு செய்வதற்கு

**44.** குறிப்பிட்டதொரு சூழலில் தாவர உண்ணி விலங்குகள் மட்டும் உள்ளபோது பின்வருவனவற்றில் நடைபெறக்கூடியது எது?

(1) விலங்குகளின் எண்ணிக்கை மிக விரைவில் அதிகரித்துப் பின்னர் குறைவடையும்.

(2) மிக நன்றாக வளரும் தாவரத் தொகுதிகள் சூழலில் காணப்படும்.

(3) சிறிய விலங்குகள் பெரிய விலங்குகளுக்கு உணவாகும் நிலை ஏற்படும்.

**45.** மின் சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய செயற்பாடு யாது?

(1) உணவு சூடாக இருக்கும்போது குளிர்சாதனப் பெட்டியில் வைத்தல்


(2) மின்னழுத்தியைப் பயன்படுத்தும்போது பல நாட்களுக்குத் தேவையான ஆடைகளை ஒரு தடவையில் அழுத்துதல்

(3) நீரைக் கொதிக்க வைப்பதற்கு மின்கேத்தலைப் பயன்படுத்துதல்


[பக். 7 ஐப் பார்க்க

நாங்கள் வீதியில் நடந்து செல்லும்போது வலது பக்கமாகப் பயணிப்பதால் ஏற்படும் அனுகூலமான நிலைமையாக **அமையாதது**
(1) எதிரே வரும் வாகனங்கள் நன்றாகத் தெரிதல்
(2) பின்னால் வரும் வாகனங்கள் நமக்குத் தொலைவில் பயணித்தல்
(3) வீதிக்குக் குறுக்கே செல்லும்போது இரண்டு பக்கங்களையும் பார்ப்பதற்கான தேவை இல்லாதிருத்தல்

வர்ணமயமான, நறுமணம் நிறைந்த சுவையான பழம் உள்ள ஒரு தாவரம் பரவுவது பெருமளவில் எந்த விதத்திலாகும்?
(1) விலங்குகளின் மூலம் (2) நீரின் மூலம் (3) காற்றின் மூலம்





இப்பாத்திரத்தை யன்னலுக்கு அருகில் வைத்துச் சில நாட்களின் பின்னர் பார்த்தபோது பயற்றம் விதை ஒன்றேனும் முளைத்திருக்கவில்லை. இதற்கான காரணமாக இருக்கக்கூடியது
(1) சூரிய ஒளி இல்லாதிருந்தமை
(2) வளி இல்லாதிருந்தமை
(3) நீர் இல்லாதிருந்தமை




மேலே காட்டப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி பல்வேறு நாடுகளிலும் பகல், இரவு நேரங்கள் ஏற்படும் விதத்தைச் செய்து காட்டும்போது செய்ய வேண்டிய விடயம்
(1) மின்சூளின் ஒளியை முழுப் புவிக் கோளமும் ஒளிமயமாகும் விதத்தில் பரப்புதல்
(2) மாதிரிப் புவிக் கோளத்தை அதன் அச்சினைச் சுற்றிச் சுழலச் செய்தல்
(3) மின்சூளை மாதிரிப் புவிக் கோளத்தைச் சுற்றிச் சுழலச் செய்தல்

மனிதர் பெருமளவில் பயன்படுத்தும் மருந்தினை உற்பத்தி செய்யும் பிராணி
(1) தேனீ (2) மண்புழு (3) இலையான்




புதிய கோழி முட்டை ஒன்று பாத்திரத்தில் உள்ள நீரில் மிதக்கும் விதம் மேலுள்ள வரிப்படத்தில் காட்டப்படுகிறது. இந்தப் பாத்திரத்தில் இருப்பது
(1) சுத்தமான குளிர் நீர் (2) உப்பு கலந்த குளிர் நீர் (3) சுத்தமான சூடான நீர்

2. ஒற்றுமையாக வாழ்வதற்கு ஒருவர் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் எது?
(1) தனது கருத்துக்கு ஏற்றதாகச் செயற்படுவதற்கு ஏனையோரும் முற்பட வேண்டும் என்பதை
(2) தான் விரும்பாத விடயங்களை ஏனைய அனைவரும் விரும்பமாட்டார் என்பதை
...ன் விரும்பும் விடயங்களை விரும்பாதவர்களும் இருக்கக்கூடும் என்பதை

[பக். 8 ஐப் பார்க்க

**53.** பகைவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளப் பிராணிகள் இசைவாக்கமடையும் விதம்
(1) தாவரங்களில் பச்சை நிற இலைகளிடையே பச்சை நிறப் புழுக்கள் இருத்தல்
(2) சிலவற்றை வெட்டுவதற்குக் கிளிக்குக் கூரான சொண்டு இருத்தல்
(3) வெளியே நீட்டக்கூடிய நீண்ட நாக்கு பாம்புகளுக்கு இருத்தல்


**54.** அரச இலச்சினையில் உள்ள நெற்கதிர்களினால் குறிப்பிடப்படுவது
(1) சௌபாக்கியமும் பொலிவும் (2) தன்னிறைவும் செழிப்பும் (3) நித்திய நிலைத்திருப்பு

**55.** போதுமான அளவு நீரை நாளாந்தம் பருகுவது
(1) சிறுநீர் கழிப்பதில் அசௌகரியம் ஏற்படக் காரணமாகும்.
(2) உடல் அதிக அளவில் பருமனாவதற்குக் காரணமாகும்.
(3) உடல் ஆரோக்கியமாவதற்குக் காரணமாகும்.

**56.** சப்பாத்தின் அடிப்பாகம் தேய்ந்து போனதால் புதிய அடிப்பாகத்தை வைத்துச் சப்பாத்தைச் சீரப்படுத்தியதாக அருண் கூறினான். அவனின் செயற்பாட்டை நன்கு விவரிப்பது பின்வரும் எந்தக் கூற்று ஆகும்.
(1) பொருள்களை உரிய விதத்தில் பராமரித்தல் வேண்டும்.
(2) பொருள்களைச் சிக்கனத்துடன் பயன்படுத்துதல் வேண்டும்.
(3) பொருள்களை நன்கு சுத்தப்படுத்தி வைத்தல் வேண்டும்.

**57.** சரணாலயங்களை நடாத்துவதனால் எதிர்பார்க்கப்படுவது
(1) விலங்குகளுக்கு அவற்றின் சூழலிலேயே வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்
(2) விலங்குகளுக்கிடையில் ஒன்றுக்கொன்று ஏற்படும் துன்பகரமான செயல்களைக் குறைந்தளவினதாக்குதல்
(3) விலங்குகளிடமிருந்து இலகுவாக உணவைப் பெறுதல்

**58.** கடதாசியின் மேல் குண்டூசிகளைப் பரப்பி அதன்மீது சட்டக் காந்தத்தை வைத்தபோது குண்டூசிகள் ஈர்க்கப்படுதலைச் சரியாகக் காட்டுவது பின்வருவனவற்றுள் எந்த வரிப்படம் ஆகும்?




**59.** வீட்டில் மின்குமிழை மாற்றும்போது செய்யப்படக்**கூடாத** செயல் யாது?
(1) பிரதான ஆளியைத் தொடர்பறுத்தல்
(2) மூத்த அங்கத்தவரின் மேற்பார்வையில் நடவடிக்கையை மேற்கொள்ளல்
(3) மின்குமிழைக் கழற்றுவதற்கு ஈரமான துணித் துண்டைப் பயன்படுத்துதல்

**60.** பெருமழை பெய்தபோது ஆதவனின் வீட்டுக்கு மாதவன் வந்தான். அப்போது ஆதவன் வீட்டு முற்றம் நீரினால் நிரம்பியிருந்தது. 'கடதாசிக் கப்பலை மிதக்க விடுவோம்' என்று மாதவன் கூறினான். ஆதவன் என்று உங்களை நினைத்து அதன் பின்னர் செய்தவை பற்றி **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்பும் எழுத்துக்கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..............................................................................................................

..............................................................................................................

2. ..............................................................................................................

..............................................................................................................

3. ..............................................................................................................

..............................................................................................................

***

CamScanner